# வெற்றிடங்கள்

## இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI)

**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அமைச்சு**

SRI LANKA STANDARDS INSTITUTION
GUARDIAN OF QUALITY

### பணிப்பாளர் (நிர்வாகம்) - சிரேஷ்ட முகாமையாளர் பிரிவு (HM 1 – 3)

## பணிப்பாளர் (நிர்வாகம்) — 01 பதவி

**தகைமைகள்**

**வெளிவாரி**

மனித வள முகாமைத்துவம், பொது நிர்வாகம், பொது முகாமைத்துவம், வர்த்தக நிர்வாகம், வர்த்தகம் அல்லது விடயப்பரப்புக்குத் தொடர்புடைய வேறு ஏதேனும் துறையில் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட இளமாணிப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு அது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்புப் பட்டம் (முதுமாணி மட்டம்) அல்லது தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் கூட்டுவர்த்தக/ பட்டய அங்கத்துவம்

**மற்றும்**

கூட்டுத்தாபனம், நியதிகள் சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றின் ஆரம்பப் பட்டத்தின் பின்னர் குறைந்தது 15 ஆண்டுகள் தொடர்புடைய அனுபவம்.

**உள்வாரி (பின்வரும் (a) அல்லது (b))**

a) மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.

b) பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் சிரேஷ்ட முகாமைத்துவ பிரிவில் (HM 1 – 1) பதவி ஒன்றில் குறைந்தது இரண்டு (2) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**தேர்வு முறை**

கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

**ஏனையவை**

அனைத்து விண்ணப்பதாரர்களும்

- இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
- நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவிக்கும் உரிய பணிகளை மேற்கொள்வதற்கும் உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
- சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு : இ.ரூபா 152,500.00 – 15x4,100.00 - இ.ரூபா 214,000.00** (2025.03.25ஆம் திகதிய 01/2025 முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின்படி மூன்று தவணைகளில் இது மேற்கொள்ளப்படும், 2025 இல்: இ.ரூபா 113,556.00, 2026 இல: இ.ரூபா 133,028.00, 2027 இல்: 152,500.00)

**வயது** : 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஏனைய நன்மைகள்**

1. PED/1/2015 மற்றும் PED/1/2015(i) ஆம் இலக்க அரச நிறுவன சுற்றுநிருபத்தின்படி வாகனம் அல்லது போக்குவரத்துக் கொடுப்பனவு வழங்கப்படும்.
2. பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறையை பணமாக்குதல்
3. ஆயுள் காப்புறுதித் திட்டம் மற்றும் மருத்துவ காப்புறுதித் திட்டம்
4. வரையரைக்குட்பட்ட மருத்துவ செலவுகளை திருப்பிச் செலுத்துதல்
5. பொதுத் திறைசேரியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வருடாந்த ஊக்குவிப்புத் தொகை
6. தொழில்சார் சூழல் ஒன்றில் பணி புரியும் வாய்ப்பு
7. தொழில்சார் கொடுப்பனவு (01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)
8. தொடர்பாடல் கொடுப்பனவு

சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் இரண்டு உறவினர் அல்லாத நடுநிலையானவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் முழுப் பெயர், வயது, கல்வி தகைமைகள் மற்றும் ஏனைய வேறு தொடர்புடைய விடயங்கள் சகிதமான விண்ணப்பங்களை 2025-11-17ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், இலங்கை கட்டளைகள் நிறுவனம், இல. 17, விக்டோரியா பிளேஸ், எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-08 என்ற முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அரச துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**

**இலங்கை கட்டளைகள் நிறுவனம்**

**தொலைபேசி: 011-2671567-72**
**011-2019600**